| வினாத்தொகுப்பு எண் : |
|---|
| 20001725 |

# GST2AM/2025

பதிவு எண். | | | | | | | | | | |

**2025**

**தாள் – II**

**இந்த வினாப்புத்தகம்**

**பகுதி-அ-பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்), பகுதி-ஆ-பொது நுண்ணறிவு மற்றும் பகுத்தறிவு மற்றும் பகுதி-இ-பொதுத் தமிழ் (பத்தாம் வகுப்புத் தரம்) ஆகியவற்றினை உள்ளடக்கியது**

**கால அளவு : மூன்று மணி நேரம்]** **[மொத்த மதிப்பெண்கள் : 300**

**வினாக்களுக்கு விடையளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, **200** வினாக்களைக் கொண்டுள்ளது. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது.
3. விடைகளை குறிப்பதற்கு OMR விடைத்தாள் ஒன்று அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
4. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. இவ்வினாத்தொகுப்பு எண்ணை OMR விடைத்தாளில் குறிப்பதற்கு முன்பும் மற்றும் விடையளிக்கத் தொடங்கும் முன்பும், இவ்வினாத்தொகுப்பில் அனைத்து வினாக்களும் வரிசையாக அச்சிடப்பட்டுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாட்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினாத்தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத்தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
6. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D) மற்றும் (E) என ஐந்து பதில்களை (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், அவற்றுள் மிகச்சரியானது என நீங்கள் எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்ப வேண்டும்.** எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடை தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையினை அளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
8. வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவிதக் குறிப்புகளையும் எழுதக்கூடாது. குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள "Space for Rough Work" பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.
9. வினா வரிசை எண்கள். 1 முதல் 100 வரை (பகுதி-அ) மற்றும் 101 முதல் 140 வரை (பகுதி-ஆ), ஆங்கில வடிவே இறுதியானது.
10. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையைவிட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது.
11. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்ல வேண்டும். இவ்வினாத்தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
12. விடைத்தாள் செல்லாததாக்கப்படுதல் :-
    1) வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் அதற்குரிய இடத்தில் சரியாக எழுதி அதற்குரிய வட்டங்களை நிரப்ப வேண்டும். நீங்கள் எந்த வட்டங்களை நிரப்பியுள்ளீர்களோ அதுவே இறுதியானதாகும். வினாத்தொகுப்பு எண் சரியாக எழுதப்பட்டிருந்து, அதற்குரிய வட்டங்கள் நிரப்பாமல் விடப்பட்டிருந்தாலோ அல்லது கீழ்கண்டவாறு நிரப்பப்பட்டிருந்தாலோ விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
       - தவறாக நிரப்பப்பட்டிருந்தால்
       - முறையற்று நிரப்பப்பட்டிருந்தால்
       - ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்கள் நிரப்பப்பட்டிருந்தால்
       - வழங்கப்பட்ட வினாத்தாள் வரிசையின் வரம்பிற்கு உட்படாத வினாத்தாள் வரிசை எண் நிரப்பப்பட்டிருந்தால்
       - ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்கள் நிரப்பப்படாமல் விடப்பட்டிருந்தால்
       - உங்களுக்கு வழங்கப்பட்ட வினாத்தொகுப்பில் அச்சிடப்படாத வேறு எண்களை வினாத்தொகுப்பிற்கான வட்டங்களில் நிரப்பப்பட்டிருந்தால்
    2) கருமைநிற மை கொண்ட பந்துமுனைப் பேனா (Black Ink Ball Point Pen) தவிர வேறு பேனா உபயோகப்படுத்தி OMR விடைத்தாள் நிரப்பப்பட்டிருப்பின் அவ்விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
13. மதிப்பெண்கள் குறைக்கப்படுதல் :-
    - வினாத்தொகுப்பு எண் எழுதுவதற்கு வழங்கப்பட்ட கட்டங்களில் வினாத்தொகுப்பு எண் எழுதப்படாமலோ அல்லது பகுதியளவு எழுதப்பட்டிருந்தாலோ விண்ணப்பதாரர் பெற்ற மொத்த மதிப்பெண்களிலிருந்து ஐந்து மதிப்பெண்கள் குறைக்கப்படும்.
14. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையத்தின் விருப்புரிமையின் அடிப்படையில் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

SEAL

⇆

[Turn over

SPACE FOR ROUGH WORK

# பகுதி-அ – பொது அறிவு

## Part-A – General Studies

**வினாக்கள் : 1–100**

**Questions : 1–100**

---

1. Arrange the following OSI layers in order

   (1) Data Link Layer

   (2) Physical Layer

   (3) Transport Layer

   (4) Network Layer

   (A) (2), (1), (4), (3)
   (B) (2), (3), (1), (4)
   (C) (4), (3), (2), (1)
   (D) (3), (1), (4), (2)
   (E) Answer not known

   பின்வரும் OSI அடுக்குகளை வரிசைப்படுத்தவும்.

   (1) தரவு இணைப்பு அடுக்கு

   (2) வன் அடுக்கு

   (3) கடத்தி அடுக்கு

   (4) இணைவலை அடுக்கு

   (A) (2), (1), (4), (3)
   (B) (2), (3), (1), (4)
   (C) (4), (3), (2), (1)
   (D) (3), (1), (4), (2)
   (E) விடை தெரியவில்லை

2. Assertion [A] : In humans, individuals inherit Mitochondrial DNA strictly from their mothers.

Reason [R] : Therefore, the mtDNA sequences obtained from maternally related individuals such as a brother and a sister (or) a mother and a daughter exactly match each other when there is no mutation in either of cases.

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(C) [A] is false, [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : மனிதர்களில் மரபியல் மைட்டோகாண்ட்ரியல் mtDNA ஒவ்வொருவரும் தங்கள் தாயிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள்.

காரணம் [R] : mtDNA-யை தாய் சார்ந்த சகோதரர் மற்றும் சகோதரிகளிடமோ அல்லது தாய் மற்றும் மகளிடமோ இருந்தாலும் சடுதி மாற்றம் இல்லாமல் ஒரே மாதிரியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] சரி மற்றும் [R], [A]விற்கான சரியான விளக்கம்

(C) [A] தவறு [R] சரி

(D) [A] மற்றும் [R] சரி, ஆனால் [R], [A]விற்கான சரியான விளக்கம் இல்லை

(E) விடை தெரியவில்லை

3. In IVF technique, fusion of sperm and ovum takes place in

(A) Vagina

(B) Fallopian tube

(C) Culture medium

(D) Uterus

(E) Answer not known

IVF முறையில் விந்தணுவும் அண்டமும் இணைவது பின்வருவனவற்றில் எதில் நடைபெறுகிறது?

(A) யோனிக் குழாய்

(B) ஃபலோப்பியன் குழாய்

(C) வளர்ப்பு ஊடகம்

(D) கருப்பை

(E) விடை தெரியவில்லை

4. Choose the right matches among type

The methods employed in micro propagation and improvement of tree species are

| | | | |
|---|---|---|---|
| (1) | Clonal multiplication | – | *Prosopis cineraria* |
| (2) | Protoplast culture and genetic engineering | – | *Dalbergia sisso* |
| (3) | By somatic embryogenesis | – | *Cupressus arizonica* |
| (4) | Germplasm conservation | – | *Tectona grandis* |

(A) (1) and (3) correct

(B) (1) and (4) correct

(C) (2) and (3) correct

(D) (3) and (4) correct

(E) Answer not known

கீழ்க்கண்டவற்றில் சரியான இணையைக் கண்டுபிடிக்கவும்.

மைக்ரோ பரப்புதல் மற்றும் மர இனங்களை மேம்படுத்தும் முறை

| | | | |
|---|---|---|---|
| (1) | குளோனல் பெருக்க முறை | – | புரோசோபிஸ் சினிரேரியா |
| (2) | புரோட்டோ பிளாஸ்ட் வளர்ப்பு மற்றும் மரபணு பொறியியல் முறை | – | டால்பர்ஜியா சிசு |
| (3) | உடலியல் கரு உருவாக்கம் | – | குப்ரஸஸ் அரிசோனிகா |
| (4) | ஜெர்ம்பிளாசம் பாதுகாப்பு | – | டெக்டோனா கிராண்டிஸ் |

(A) (1) மற்றும் (3) சரி

(B) (1) மற்றும் (4) சரி

(C) (2) மற்றும் (3) சரி

(D) (3) மற்றும் (4) சரி

(E) விடை தெரியவில்லை

THIS QUESTION AND ANSWER ARE TO BE PLACED BEFORE THE EXPERT COMMITTEE FOR FINAL DECISION

இக்கேள்வி மற்றும் விடை இறுதி முடிவிற்காக வல்லுநர் குழுவின் முன் வைக்கப்பட உள்ளது.

5. Which of the following is incorrectly paired?

| | | | |
|---|---|---|---|
| (i) | Atal Tinkering Lab | – | Nurtures an innovative mindset towards research amongst high school students |
| (ii) | Krishi Neev | – | Platform to promote technology interventions in agriculture |
| (iii) | Palna | – | Provides support service like safe accommodation and Medical assistance to working women |
| (iv) | Unnati | – | Technology platform integrated with artificial intelligence to match job providers with seekers |

(A) (iv) only

(B) (i) and (ii) only

(C) (iii) only

(D) (i) and (iv) only

(E) Answer not known

பின்வருவனவற்றில் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?

| | | | |
|---|---|---|---|
| (i) | அடல் டிங்கரிங் ஆய்வகம் | – | உயர்நிலை பள்ளி மாணவர்களிடையே ஆராய்ச்சிக்கான புதுமையான மனநிலையை வளர்க்கிறது |
| (ii) | கிரிஷி நீவ் | – | விவசாயத்தில் தொழில் நுட்பத் தலையீடுகளை ஊக்குவிக்கும் தளம் |
| (iii) | பல்னா | – | பணிபுரியும் பெண்களுக்குப் பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் மருத்துவ உதவி போன்ற ஆதரவுச் சேவைகளை வழங்குகிறது |
| (iv) | உன்னதி | – | வேலை தேடுபவர்களுடன் வேலை வழங்குபவர்களைப் பொருத்த செயற்கை நுண்ணறிவுடன் ஒருங்கிணைக்கப்பட்ட தொழில்நுட்பத் தளம் |

(A) (iv) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (iii) மட்டும்

(D) (i) மற்றும் (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

6. Match the following :

(a) Hydrogen bomb — 1. Uncontrolled nuclear fission reaction

(b) Power reactor — 2. Controlled fusion reaction

(c) Magnetic confinement of plasma — 3. Controlled fission reaction

(d) Atom bomb — 4. Fission - Fusion reaction

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) Answer not known

பின்வருவனவற்றை பொருத்துக :

(a) ஹைட்ரஜன் குண்டு — 1. கட்டுப்பாடற்ற அணுக்கரு பிளவு வினை

(b) திறன் உலை — 2. கட்டுப்படுத்தப்பட்ட இணைவு வினை

(c) பிளாஸ்மாவின் காந்தவியல் அடக்கல் — 3. கட்டுப்படுத்தப்பட்ட அணுக்கரு பிளவு வினை

(d) அணுகுண்டு — 4. அணுக்கரு பிளவு - இணைவு வினை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

7. Which of the following is/are correct about Dip-Pen Nano Lithography (DPN)?

(i) It is a direct method

(ii) It works on diffusion through water molecules

(iii) It patterns a variety of materials

(iv) It is a fast scanning process

(A) (i) only

(B) (ii) only

(C) (i), (ii) and (iii) only

(D) all of the above

(E) Answer not known

பின்வருவனவற்றில் எது/எவை டிப் பேனா நானோ லித்தோகிராபி (DPN) பற்றி சரியானவை?

(i) இது ஒரு நேரடி முறை

(ii) இது தண்ணீரது மூலக்கூறுகள் பரவுதல் மூலம் வேலை செய்கிறது

(iii) இது பல்வேறுபட்ட பொருட்களின் வடிவங்களை வரைகிறது

(iv) இது ஒரு அதிவேக ஸ்கேன் செயல்முறை

(A) (i) மட்டும்

(B) (ii) மட்டும்

(C) (i), (ii) மற்றும் (iii) மட்டும்

(D) மேற்கூறிய அனைத்தும்

(E) விடை தெரியவில்லை

8. The primary objective of Global One-Stop Centres (OSCs) established by Ministry of external affairs is

(A) Promote student and faculty exchange programme

(B) Facilitate research and development among Higher Education Institutions

(C) Provide comprehensive assistance to women in vulnerable situations

(D) Support Indian students studying abroad during crisis

(E) Answer not known

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் நிறுவப்பட்ட உலகளாவிய ஒரு நிறுத்த மையங்களின் (OSCs) முதன்மை நோக்கம்

(A) மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்ற திட்டத்தை ஊக்குவிப்பதற்காக

(B) உயர் கல்வி நிறுவனங்களிடையே ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை எளிதாக்க

(C) பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் உள்ள பெண்களுக்கு விரிவான உதவிகளை வழங்க

(D) நெருக்கடியின் போது வெளிநாட்டில் படிக்கும் இந்திய மாணவர்களுக்கு ஆதரவளிக்க

(E) விடை தெரியவில்லை

9. Arranging chronological order/event type

Arrange the following poverty alleviation programmes in chronological order

(1) Sampoorna Grameen Rozgar Yojana

(2) Swarnajayanthi Gram Swarozgar Yojana

(3) Integrated Rural Development Project

(4) Food for Work Program

(A) (1), (2), (3), (4)

(B) (4), (3), (2), (1)

(C) (2), (4), (3), (1)

(D) (3), (4), (1), (2)

(E) Answer not known

கீழ்க்கண்ட நிகழ்வுகளை காலவரிசைப்படுத்துக.

பின்வரும் வறுமை ஒழிப்பு திட்டங்களை காலவரிசைப்படி ஒழுங்குபடுத்தவும்

(1) சம்பூர்ண கிராமீன் ரோஸ்கர் யோஜனா

(2) ஸ்வர்ணஜெயந்தி கிராம் ஸ்வரோஸ்கர் யோஜனா

(3) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

(4) வேலைக்கான உணவுத் திட்டம்

(A) (1), (2), (3), (4)

(B) (4), (3), (2), (1)

(C) (2), (4), (3), (1)

(D) (3), (4), (1), (2)

(E) விடை தெரியவில்லை

10. Assertion [A] : The lack of alternate employment, skill training (or) credit facilities for women, is another factor that keeps them in poverty.

Reason [R] : Poverty is increasingly becoming a feminine identity.

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(C) [A] is false but [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : பெண்களுக்கான மாற்று வேலை வாய்ப்பு, திறன் பயிற்சி அல்லது கடன் வசதி இல்லாதது அவர்களை வறுமையில் வைத்திருக்கும் மற்றொரு காரணியாகும்.

காரணம் [R] : வறுமை தொடர்ந்து பெண்ணிய அடையாளமாக மாறி வருகிறது.

(A) [A] உண்மை ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் உண்மை, [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம்

(C) [A] தவறு ஆனால் [R] உண்மை

(D) [A] மற்றும் [R] இரண்டும் உண்மை ஆனால் [R] என்பது [A]விற்கான சரியான விளக்கம் அல்ல

(E) விடை தெரியவில்லை

11. Article ———————— of the Indian Constitution Prohibits the employment of children in Factories, Mines, or any other hazardous occupation.

(A) 21 A

(B) 24

(C) 17

(D) 39

(E) Answer not known

இந்திய அரசியலமைப்பின் ———————— பிரிவு, தொழிற்சாலைகள், சுரங்கங்கள் அல்லது வேறு எந்த ஆபத்தான தொழிலிலும் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்கிறது.

(A) 21 A

(B) 24

(C) 17

(D) 39

(E) விடை தெரியவில்லை

12. Match the schemes with years.

| | | | |
|---|---|---|---|
| (a) | Neengal Nalama | 1. | 2000 |
| (b) | Manu Needhi | 2. | 2021 |
| (c) | Kural Mutrodhal | 3. | 2024 |
| (d) | Illam Thedi Kalvi | 4. | 1969 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) Answer not known

கீழ்க்காணும் திட்டங்களை அந்தந்த வருடத்துடன் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | நீங்கள் நலமா | 1. | 2000 |
| (b) | மனு நீதி | 2. | 2021 |
| (c) | குறள் முற்றோதல் | 3. | 2024 |
| (d) | இல்லம் தேடி கல்வி | 4. | 1969 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

13. Tamil Nadu skill development corporations established a new platform by using AI Technology to guide the youth's employment and skill training is called as

(A) 'Inaya'

(B) 'Ilaya'

(C) 'Naan Mudhalvan'

(D) 'You are your own king' Scheme

(E) Answer not known

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தின் மூலமாக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் திறன் பயிற்சிக்கு வழிகாட்டு அமைக்கப்பட்ட ஒரு தளம்

(A) 'இனைய'

(B) 'இளைய'

(C) 'நான் முதல்வன்'

(D) 'நீயே உனக்கு ராஜா' திட்டம்

(E) விடை தெரியவில்லை

14. ______________ state has the highest percentage of unemployment during the year 2022-23.

(A) Kerala
(B) Haryana
(C) Punjab
(D) Tamil Nadu
(E) Answer not known

______________ மாநிலம் 2022-23 கணக்கெடுப்பின் போது அதிக வேலையின்மை விகிதம் கொண்ட மாநிலம்.

(A) கேரளா
(B) ஹரியானா
(C) பஞ்சாப்
(D) தமிழ்நாடு
(E) விடை தெரியவில்லை

15. The Total Gross Enrollment Ratio of Tamil Nadu in higher education during 2021-2022 was ______________.

(A) 45 percent
(B) 46 percent
(C) 47 percent
(D) 48 percent
(E) Answer not known

2021-2022 ஆம் கல்வி ஆண்டில் தமிழ்நாட்டில் உயர் கல்விப் பயில்வோரின் மொத்தப் பதிவு ______________ உள்ளது.

(A) 45 சதவிகிதம்
(B) 46 சதவிகிதம்
(C) 47 சதவிகிதம்
(D) 48 சதவிகிதம்
(E) விடை தெரியவில்லை

16. Which of the following credit schemes for Farmers Producers Organisations (FPOs) is incorrectly paired?

| | | | |
|---|---|---|---|
| (i) | Credit guarantee scheme | – | Direct cash grants |
| (ii) | Mezzanine capital assistance | – | Non repayable credit |
| (iii) | Revolving fund support | – | Concessional credit |
| (iv) | Nabkisan | – | Initiates credit schemes with T.N. |

(A) (i) and (iv)
(B) (i) and (ii)
(C) (iii) and (iv)
(D) (ii) and (iii)
(E) Answer not known

விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்பிற்கான பின்வரும் கடன் திட்டங்களில் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?

| | | | |
|---|---|---|---|
| (i) | கடன் உத்தரவாதத் திட்டம் | – | நேரடி பண நிதி |
| (ii) | மெஸ்ஸானைன் மூலதன உதவி | – | திருப்பிச் செலுத்தமுடியாத கடன் |
| (iii) | சுழல் நிதி ஆதரவு | – | சலுகை கடன் |
| (iv) | நப்கிசான் | – | தமிழ்நாடு அரசுடன் இணைந்து கடன் திட்டங்களைச் செயல்படுத்துதல் |

(A) (i) மற்றும் (iv)
(B) (i) மற்றும் (ii)
(C) (iii) மற்றும் (iv)
(D) (ii) மற்றும் (iii)
(E) விடை தெரியவில்லை

17. Which of the following statements are True about features of Tamil Nadu Economy?

(i) Tamil Nadu has $7^{th}$ highest GSDP per capita

(ii) Tamil Nadu has low industries and small service sectors

(iii) Tamil Nadu is second largest economy among the states in India

(A) (i) only

(B) (i) and (ii) only

(C) (iii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

தமிழ்நாடு பொருளாதாரத்தின் இயல்புகளைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(i) ஜிஎஸ்டிபி தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு 7-வது உயர்ந்த இடத்தில் உள்ளது

(ii) தமிழ்நாடு குறைந்த தொழில்கள் மற்றும் சிறு சேவைத் துறைகளைக் கொண்டுள்ளது

(iii) இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது பெரிய பொருளாதாரத்தை உடையது

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (iii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

18. Match the following climate conferences with respective themes.

| | | | |
|---|---|---|---|
| (a) | Kyoto protocol | 1. | Limit global temperature rise |
| (b) | Rio Earth summit | 2. | Protecting Ozone layer |
| (c) | Paris Agreement | 3. | Global Framework for sustainable development |
| (d) | Montreal protocol | 4. | Commitment to reduce emissions |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) Answer not known

பின்வரும் காலநிலை மாநாடுகளையும் அது சார்ந்த கருத்தையும் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | கியோட்டோ நெறிமுறை | 1. | உலக வெப்பநிலை உயர்வை கட்டுப்படுத்துதல் |
| (b) | ரியோ பூமி உச்சி மாநாடு | 2. | ஓசோன் படலத்தை பாதுகாத்தல் |
| (c) | பாரிஸ் ஒப்பந்தம் | 3. | நிலையான வளர்ச்சிக்கான உலகளாவிய கட்டமைப்பு |
| (d) | மாண்ட்ரீல் நெறிமுறை | 4. | உமிழ்வை குறைப்பதற்கான அர்ப்பணிப்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

19. Assertion [A] : COP28 marked a significant milestone in global climate action by explicitly calling for a transition away from fossil fuels.

Reason [R] : The Global stocktake, a key component of the Paris Agreement, highlighted the urgent need to accelerate climate action.

(A) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(B) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

(C) [A] is true, but [R] is false

(D) [A] is false, but [R] is true

(E) Answer not known

கூற்று [A] : படிம எரிபொருள்களிலிருந்து ஒரு விலக்க மாற்றத்திற்கான வெளிப்படையான அழைப்பினால் உலகளாவிய காலநிலை நடவடிக்கையில், COP28, ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை அடைந்தது.

காரணம் [R] : பாரிஸ் ஒப்பந்தத்தின் முக்கிய அங்கமான குளோபல் ஸ்டாக்டேக், காலநிலை நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டிய அவசரத் தேவையை எடுத்துரைத்தது.

(A) [A] மற்றும் [R] இரண்டும் உண்மை, மேலும் [R] என்பது [A] இன் சரியான விளக்கமாகும்

(B) [A] மற்றும் [R] இரண்டும் உண்மை, ஆனால் [R] என்பது [A] இன் சரியான விளக்கமல்ல

(C) [A] உண்மை, ஆனால் [R] என்பது தவறானது

(D) [A] என்பது தவறானது, ஆனால் [R] என்பது உண்மை

(E) விடை தெரியவில்லை

20. The threatened species found in the Agasthiayamalai Biosphere Reserve are

(i) Lion-tailed macaque, slender loris and great pied hornbill

(ii) Rudraksh tree, black plums, wild dahman and gaub tree

(iii) Slender loris, lion-tailed macaque, black plums rudraksh tree and green pit viper

(A) (i) and (ii) only

(B) (ii) and (iii) only

(C) (iii) and (i) only

(D) (i), (ii) and (iii)

(E) Answer not known

அகஸ்தியமலை உயிர்க்கோளக் காப்பகத்தில் காணப்படும் அழிந்து வரும் இனங்கள் என்பவை

(i) சிங்கவால் குரங்கு, ஸ்லின்டர் லோரிஸ், பெரிய பைட் ஹார்ன்பில்

(ii) ருத்திராட்ச மரம், கருப்பு பிளம், காட்டு டஹ்மான், மற்றும் காப் மரம்

(iii) மெல்லிய லோரிஸ், சிங்கவால் குரங்கு, கருப்பு பிளம், ருத்ராட்ச மரம், மற்றும் பச்சைக் குழி வைப்பர்

(A) (i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (iii) மற்றும் (i) மட்டும்

(D) (i), (ii) மற்றும் (iii)

(E) விடை தெரியவில்லை

21. Consider the following statements.

(a) Forests regulate floods and droughts
(b) Almost 10% of tropical forests are lost each year
(c) Nearly 47% of forests Worldwide are tropical forests
(d) 45% of the World's forest are under protected areas

The correct statements are :

(A) (b) and (c)
(B) (a), (b) and (c)
(C) (a) and (c)
(D) (c) and (d)
(E) Answer not known

பின்வரும் அறிக்கைகளைக் கருத்தில் கொள்க.

(a) வனங்கள் வெள்ளம் மற்றும் வறட்சியை ஒழுங்குபடுத்துகின்றன
(b) ஒவ்வொரு வருடமும், கிட்டத்தட்ட 10% வெப்பமண்டல காடுகள் இழக்கப்படுகின்றன
(c) உலகெங்கிலும் உள்ள காடுகளில் கிட்டத்தட்ட 47% வெப்பமண்டல காடுகள் ஆகும்
(d) உலகின் 45% காடுகள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் உள்ளன

சரியான அறிக்கைகள் என்பவை :

(A) (b) மற்றும் (c)
(B) (a), (b) மற்றும் (c)
(C) (a) மற்றும் (c)
(D) (c) மற்றும் (d)
(E) விடை தெரியவில்லை

22. ________ satellite was sent by ISRO on 1st January 2024 to study cosmic X rays.

(A) ASTROSAT
(B) Aditya - 1
(C) Chandrayan – 1
(D) Xposat
(E) Answer not known

________ செயற்கைகோள் 1, ஜனவரி 2024 அன்று இஸ்ரோ காஸ்மிக் எக்ஸ் கதிர்களை ஆய்வு செய்யும் பொருட்டு அனுப்பப்பட்டது.

(A) ஆஸ்ட்ரோசாட்
(B) ஆதித்யா - 1
(C) சந்திரயான் - 1
(D) எக்ஸ்போசாட்
(E) விடை தெரியவில்லை

23. Central salt and marine chemicals Research Institute is located at

(A) Cochin

(B) Chennai

(C) Bhavnagar

(D) Narimanam

(E) Answer not known

மத்திய உப்பு மற்றும் கடல் ஆராய்ச்சி நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?

(A) கொச்சின்

(B) சென்னை

(C) பவ்நகர்

(D) நரிமணம்

(E) விடை தெரியவில்லை

24. Clean Air Act was passed in the year ___________.

(A) 1970

(B) 1972

(C) 1969

(D) 1980

(E) Answer not known

சுத்தமான காற்றுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ___________.

(A) 1970

(B) 1972

(C) 1969

(D) 1980

(E) விடை தெரியவில்லை

25. Match the following Bird Sancturies with their districts :

| Bird Sancturies | | | Districts |
|---|---|---|---|
| (a) | Vettangudi | 1. | Sivagangai |
| (b) | Mayura Thottam | 2. | Ariyalur |
| (c) | Vellode | 3. | Thoothukudi |
| (d) | Karaivetti | 4. | Erode |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

(E) Answer not known

பின்வரும் பறவைகள் சரணாலயத்தை அதன் மாவட்டத்துடன் பொருத்தவும் :

| பறவைகள் சரணாலயம் | | | மாவட்டங்கள் |
|---|---|---|---|
| (a) | வேட்டன்குடி | 1. | சிவகங்கை |
| (b) | மயூரா தோட்டம் | 2. | அரியலூர் |
| (c) | வெள்ளோடு | 3. | தூத்துக்குடி |
| (d) | கரைவெட்டி | 4. | ஈரோடு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

26. Arrange the following periods in order :

(1) Prehistoric period

(2) Chola's period

(3) Sangam period

(4) Pallava's period

(A) (1), (4), (3), (2)

(B) (2), (4), (1), (3)

(C) (1), (3), (4), (2)

(D) (2), (3), (4), (1)

(E) Answer not known

பின்வரும் காலங்களை முறைப்படி வரிசைப்படுத்துக :

(1) வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

(2) சோழர் காலம்

(3) சங்க காலம்

(4) பல்லவர் காலம்

(A) (1), (4), (3), (2)

(B) (2), (4), (1), (3)

(C) (1), (3), (4), (2)

(D) (2), (3), (4), (1)

(E) விடை தெரியவில்லை

27. Assertion [A] : V.O.C charged with sedition, was sentenced to forty years of imprisonment.

Reason [R] : He attended Surat Congress session and followed Tilak and preached his philosophy.

(A) [A] is true, [R] is false
(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
(C) Both [A] and [R] are true and [R] is not the correct explanation of [A]
(D) [A] is false, [R] is true
(E) Answer not known

கூற்று [A] : வ.உ.சி.க்கு தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு 40 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

காரணம் [R] : சூரத் மாநாட்டில் கலந்து கொண்டு திலகரைப் பின்பற்றி தத்துவத்தை ஆதரித்தார்.

(A) [A] சரி, [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R], [A]ன் சரியான விளக்கமாகும்
(C) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R], [A]ன் சரியான விளக்கம் அல்ல
(D) [A] தவறு, [R] சரி
(E) விடை தெரியவில்லை

28. Ishwar Chandra Vidyasagar setup school for girls at

(A) Bombay
(B) Surat
(C) Lahore
(D) Calcutta
(E) Answer not known

பெண்களுக்கானப் பள்ளியை ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் நிறுவிய இடம்

(A) பம்பாய்
(B) சூரத்
(C) லாகூர்
(D) கல்கத்தா
(E) விடை தெரியவில்லை

29. What have to be realized if you want to overcome the ignorance and feel healthy?

(A) Be aware and believe on the immaculate truth

(B) Duty concious

(C) Karmic Action

(D) Medicinal knowledge

(E) Answer not known

அறியாமை அகன்று நலம் தோன்றும் எப்போது?

(A) மயக்கம் தெளிந்து மாசற்ற உண்மையை உணர்தல்

(B) கடமையை செய்தல்

(C) கர்ம செயல்

(D) மருத்துவ அறிவு

(E) விடை தெரியவில்லை

30. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | Justice Party | 1. | 1949 |
| (b) | D.M.K. | 2. | 1944 |
| (c) | Dravida Kazhagam | 3. | 1916 |
| (d) | Self Respect Movement | 4. | 1925 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) Answer not known

சரியான விடையைத் பொருந்தச் செய்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | நீதிக்கட்சி | 1. | 1949 |
| (b) | தி.மு.க. | 2. | 1944 |
| (c) | திராவிடர் கழகம் | 3. | 1916 |
| (d) | சுயமரியாதை இயக்கம் | 4. | 1925 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

31. The first state level meet of self respect movement was conducted at which place?

(A) Chengalpet

(B) Madurai

(C) Chennai

(D) Kovai

(E) Answer not known

சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநில அளவிலான கூட்டம் எந்த இடத்தில் நடத்தப்பட்டது?

(A) செங்கல்பட்டு

(B) மதுரை

(C) சென்னை

(D) கோவை

(E) விடை தெரியவில்லை

32. Which one of the following statements is/are wrong regarding Edward Clive, the Governor of Madras Presidency?

(A) He usurped the regime of Nawab of Arcot

(B) He abolished the poligar system

(C) During his tenure, the supreme court of judicature in madras was founded

(D) He did not show interest in the letter of Veera Pandya Kattabomman stating the insult inflicted on him by Collector Jackson

(E) Answer not known

சென்னை மாகாணத்தின் ஆளுநர் எட்வர்ட் கிளைவ் குறித்த சொற்றொடர்களில் எது/எவை தவறானது?

(A) ஆற்காடு நவாபின் அரசைப் பறித்துக் கொண்டார்

(B) பாளையக்கார ஆட்சி முறையை ஒழித்தார்

(C) சென்னையில் தலைமை நீதிமன்றம் இவருடைய ஆட்சிக்காலத்தில் நிறுவப்பட்டது

(D) கலெக்டர் ஜாக்சன், தன்னை அவமானப்படுத்திவிட்டதாக வீரபாண்டிய கட்டபொம்மன் எழுதிய கடிதத்திற்கு எட்வர்ட் கிளைவ் ஆர்வம் காட்டவில்லை

(E) விடை தெரியவில்லை

33. Choose the right matches.

(1) Bankim Chandra Chatterjee – Anandmath

(2) Lord Minto – Madras

(3) Swadeshi – VOC

(4) Lala Lajpat Rai – The National Council of Education

(A) (1) and (3) correct

(B) (1) and (2) correct

(C) (1) and (4) correct

(D) (4) and (3) correct

(E) Answer not known

சரியான பொருத்தத்தை கண்டுபிடி.

(1) பங்கிம் சந்திர சாட்டர்ஜி – ஆனந்த மடம்

(2) மிண்டோ பிரபு – சென்னை

(3) சுதேசி – வ.உ.சி

(4) லாலா லஜபதி ராய் – கல்விக்கான தேசிய கழகம்

(A) (1) மற்றும் (3) சரி

(B) (1) மற்றும் (2) சரி

(C) (1) மற்றும் (4) சரி

(D) (4) மற்றும் (3) சரி

(E) விடை தெரியவில்லை

34. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | Madras Medical School | 1. | 1837 |
| (b) | Madras Presidency College | 2. | 1835 |
| (c) | Madras Christian College | 3. | 1842 |
| (d) | Pachayappas College | 4. | 1840 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) Answer not known

பின்வருவனவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மெட்ராஸ் மருத்துவப் பள்ளி | 1. | 1837 |
| (b) | மெட்ராஸ் பிரசிடென்சி கல்லூரி | 2. | 1835 |
| (c) | மெட்ராஸ் கிறிஸ்துவக் கல்லூரி | 3. | 1842 |
| (d) | பச்சையப்பாஸ் கல்லூரி | 4. | 1840 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

35. Who among the following was appointed as the Zamindar of Ramnad by East India Company in the place of Muthu Ramalinga Sethupathi?

(A) Mangaleswari Nachiyar

(B) Maruthu Pandiyar

(C) Raja Udaiyappa Sethupathi

(D) Raghunatha Sethupathi II

(E) Answer not known

கீழ்கண்டவர்களில் முத்துராமலிங்க சேதுபதிக்கு பதிலாக கிழக்கு இந்திய கம்பெனியால் ராம்நாட்டின் ஜமீன்தாராக நியமிக்கப்பட்டவர் யார்?

(A) மங்கலேஸ்வரி நாச்சியார்

(B) மருது பாண்டியர்

(C) ராஜ உடையப்ப சேதுபதி

(D) இரண்டாம் ரகுநாத சேதுபதி

(E) விடை தெரியவில்லை

36. Read the following Assertion and Reason and choose the correct answer from the code given below.

Assertion [A] : Anwar–ud–Din, the Nawab of Carnatic sent an army to fight against the French in 1746.

Reason [R] : Dupleix, the French Governor, failed to keep the promise of surrendering Madras to Nawab after its recapture.

Code :

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
(C) [A] is false but [R] is true
(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A]
(E) Answer not known

பின்வரும் கூற்றையும், காரணத்தையும் படித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டிலிருந்து சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

உறுதியான கூற்று [A] : கர்நாடகாவின் நவாப் அன்வர் உத்தின் பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்துப் போரிட 1746ல் ஒரு படையை அனுப்பினார்.

காரணம் [R] : மெட்ராஸ் கைப்பற்றப்பட்ட பிறகு அதை நவாப்பிடம் ஒப்படைப்பேன் என்ற வாக்குறுதியைப் பிரெஞ்சு கவர்னர் நிறைவேற்றத் தவறிவிட்டார்.

குறியீடு :

(A) [A] சரி ஆனால் [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R] என்பது [A]ன் சரியான விளக்கம்
(C) [A] தவறு ஆனால் [R] சரி
(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A]ன் சரியான விளக்கம் அல்ல
(E) விடை தெரியவில்லை

37. Match the constitutional amendments to their corresponding acts correctly.

| | Amendment | | Subject matter |
|---|---|---|---|
| (a) | 91st Amendment Act | 1. | The council of Ministers must contain no more than 15% of the Lok Sabha members, including the Prime Minister |
| (b) | 102nd Amendment Act | 2. | Women are given one-third of all seats in the Lok Sabha |
| (c) | 105th Amendment Act | 3. | It grants constitutional status to the National Commission for Backward classes |
| (d) | 106th Amendment Act | 4. | The state government is empowered again to identify and specify socially and economically backward classes |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

(E) Answer not known

அரசியலமைப்புத் திருத்தங்களை அவற்றின் தொடர்புடைய திருத்தச் சட்டங்களுடன் சரியாகப் பொருத்துங்கள்.

| | திருத்தம் | | பொருளடக்கம் |
|---|---|---|---|
| (a) | 91ஆவது திருத்தச் சட்டம் | 1. | அமைச்சர்கள் குழுவில் பிரதமர் உட்பட மக்களவை உறுப்பினர்களில் 15 விழுக்காடுக்கு மேல் இருக்கக்கூடாது |
| (b) | 102ஆவது திருத்தச் சட்டம் | 2. | மக்களவையில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடங்கள் வழங்கப்படும் |
| (c) | 105ஆவது திருத்தச் சட்டம் | 3. | இது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையத்திற்கு அரசியலமைப்புத் தகுநிலையை வழங்குகிறது |
| (d) | 106ஆவது திருத்தச் சட்டம் | 4. | சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினரைக் கண்டறிந்து குறிப்பிடும் அதிகாரம் மாநில அரசுக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

38. Which of the following statements is true about World Tamil Diaspora Day?

(i) The Chief Minister of Tamil Nadu declared January 12 as World Tamil Diaspora Day

(ii) The Diaspora Tamils conference was successfully held, with the theme of 'we will win'

(iii) Rs. 5 crore has been sanctioned for the establishment of Tamil Parapurai Kazhagam to teach Tamil to Tamils living in foreign countries.

✓(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

உலகத் தமிழ் புலம்பெயர் நாள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(i) தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜனவரி 12-ஐ உலக புலம்பெயர் தமிழர் தினமாக அறிவித்தார்.

(ii) 'நாம் வெல்வோம்' என்ற கருப்பொருளுடன் புலம்பெயர் தமிழர்கள் மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

(iii) வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பிக்க தமிழ்ப் பரப்புரை கழகம் அமைப்பதற்கு ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

39. Which of the following is correctly paired?

| | | | |
|---|---|---|---|
| (1) | Manjusha Kanwar | – | Badminton |
| (2) | Vineet Kumar Sharma | – | Chess |
| (3) | Kavitha Selvaraj | – | Kabaddi |
| (4) | R. Vaishali | – | Hockey |

(A) (2) and (4) are correct

(B) (1) and (3) are correct

(C) (3) and (4) are correct

(D) (1) and (2) are correct

(E) Answer not known

கீழ்க்கொடுக்கப்பட்டவற்றுள் பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| (1) | மஞ்சுஷா கன்வர் | – | இறகுப் பந்தாட்டம் |
| (2) | வினீத்குமார் ஷர்மா | – | சதுரங்கம் |
| (3) | கவிதா செல்வராஜ் | – | கபடி |
| (4) | R. வைஷாலி | – | ஹாக்கி |

(A) (2) மற்றும் (4) சரி

(B) (1) மற்றும் (3) சரி

(C) (3) மற்றும் (4) சரி

(D) (1) மற்றும் (2) சரி

(E) விடை தெரியவில்லை

40. Match the following :

| | Schemes | | Beneficiaries |
|---|---|---|---|
| (a) | Naan Mudalvan | 1. | Public Grievances gets resolved |
| (b) | Pudumai pen | 2. | Women Empowerment |
| (c) | Vidiyal Payanam | 3. | Education Assistance for Girl Students |
| (d) | Makkaludan Mudhalvar | 4. | Skill Development |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) Answer not known

பொருத்துக :

| | திட்டங்கள் | | பயனாளிகள் |
|---|---|---|---|
| (a) | நான் முதல்வன் | 1. | பொதுமக்கள் குறைகள் இல்லாமல் தீர்க்கப்படுவது |
| (b) | புதுமைப் பெண் | 2. | பெண்களுக்கு அதிகாரமளித்தல் |
| (c) | விடியல் பயணம் | 3. | மாணவிகளுக்கு கல்வி உதவியளித்தல் |
| (d) | மக்களுடன் முதல்வர் | 4. | திறன் மேம்பாடு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

41. Find out the correct statements about the functions of District Collector.

(i) He handles work pertaining to civil defence

(ii) He supervises the Municipal Administration in the District

(iii) He presides over the District plan Implementation Committee

(A) (i) and (ii) only

(B) (ii) only

(C) (ii) and (iii) only

(D) (i), (ii) and (iii)

(E) Answer not known

மாவட்ட ஆட்சியரின் பணிகள் தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுக்களில் சரியானவை எவை?

(i) அவர் குடிமைப் பாதுகாப்புத் தொடர்பான பணிகளை மேற்கொள்கிறார்.

(ii) அவர் தன் மாவட்டத்தில் உள்ள நகர்ப்புற நிர்வாகத்தை மேற்பார்வையிடுகிறார்

(iii) அவர் மாவட்ட திட்ட செயலாக்கக் குழுவினைத் தலைமையேற்று வழிநடத்துகிறார்

(A) (i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) மட்டும்

(C) (ii) மற்றும் (iii) மட்டும்

(D) (i), (ii) மற்றும் (iii)

(E) விடை தெரியவில்லை

42. Select the "odd one" out.

Consider the statements below regarding the advantages of State Industries Promotion Corporation of Tamil Nadu (SIPCOT) Limited.

(A) It creates and maintains well-designed industrial parks

(B) It facilitates the acquisition of land for industrial purposes for business

(C) It serves as a single point contact for investors

(D) It provides a range of loans and free electricity

(E) Answer not known

தனித்து வேறுபடும் ஒன்றைத் தெரிவு செய்க.

தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகத்தின் (சிப்காட்) நன்மைகள் குறித்து கீழே உள்ள அறிக்கைகளைக் கவனியுங்கள்.

(A) இது நன்கு வடிவமைக்கப்பட்ட தொழில்துறை பூங்காக்களை உருவாக்கி பராமரிக்கிறது

(B) தொழில் நிறுவனங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு இது உதவுகிறது

(C) இது முதலீட்டாளர்களுக்கு ஒற்றைத் தொடர்புப் புள்ளியாகச் செயல்படுகிறது

(D) இது பல்வேறு கடன்களையும், இலவச மின்சாரத்தையும் வழங்குகிறது

(E) விடை தெரியவில்லை

43. Assertion [A] : The Chief Minister of Tamil Nadu has ordered Rs. 5 Crore to translate all works of Dr.B.R. Ambedkar.

Reason [R] : The translation works of Dr.B.R. Ambedkar into Tamil will be carried out by the Information Technology and Digital Service Department.

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]

(C) [A] is false, [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct

(E) Answer not known

கூற்று [A] : அம்பேத்கரின் அனைத்துப் படைப்புகளையும் மொழிபெயர்க்க ரூ. 5 கோடி வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

காரணம் [R] : தகவல் தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மூலம் அம்பேத்கரின் படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட உள்ளது.

(A) கூற்று [A] சரி, ஆனால் காரணம் [R] தவறு

(B) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி; மற்றும் காரணம் [R], [A] கூற்றுக்கு சரியான விளக்கம்

(C) கூற்று [A] தவறு, காரணம் [R] சரி

(D) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி, ஆனால் காரணம் [R], [A] கூற்றுக்கு சரியான விளக்கமல்ல என்பது சரியானது

(E) விடை தெரியவில்லை

44. The power of the municipality to suspend (or) abolish tax is conferred by

(A) Section – 110

(B) Section – 111

(C) Section – 112

(D) Section – 113

(E) Answer not known

ஒரு வரியை நீக்கவோ அல்லது நிறுத்திவைக்கவோ நகராட்சிக்கு அதிகாரம் வழங்கும் சட்டப்பிரிவானது

(A) பிரிவு – 110

(B) பிரிவு – 111

(C) பிரிவு – 112

(D) பிரிவு – 113

(E) விடை தெரியவில்லை

45. Assertion [A] : A secretary should be immersed in files and burdened with routine

Reason [R] : It is essential that he should have time to grasp the overall picture, size up the problems facing the Government

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]

(C) [A] is false, [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct

(E) Answer not known

கூற்று [A] : ஒரு செயலாளர் கோப்புகளில் ஆழ்ந்து மற்றும் அது வழக்கமான சுமையாகவும் இருக்க வேண்டும்.

காரணம் [R] : அரசாங்கத்தின் ஒட்டுமொத்த காட்சிகளையும், எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் அளவிடுவதற்கு அவருக்கு காலம் இருப்பது அவசியம்

(A) [A] சரி ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி; மற்றும் [A] க்கு [R] சரியான விளக்கமாகும்

(C) [A] தவறு, [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [A] க்கு [R] சரியான விளக்கமல்ல என்பது சரி

(E) விடை தெரியவில்லை

46. Arrange the following committees in chronological order.

(1) G.V.K. Rao committee

(2) Ashok mehta committee

(3) Balwantrai Mehta committee

(4) L.M. Singhvi committee

(A) (2), (3), (1), (4)

(B) (3), (2), (1), (4)

(C) (4), (3), (1), (2)

(D) (1), (4), (2), (3)

(E) Answer not known

பின்வரும் குழுக்களை காலவரிசைப்படி வரிசைப்படுத்துக.

(1) G.V.K. ராவ் குழு

(2) அசோக் மேத்தா குழு

(3) பல்வந்த்ராய் மேத்தா குழு

(4) L.M. சிங்வி குழு

(A) (2), (3), (1), (4)

(B) (3), (2), (1), (4)

(C) (4), (3), (1), (2)

(D) (1), (4), (2), (3)

(E) விடை தெரியவில்லை

47. Choose the correct answer :

Which of the following statements are true about the Council of Minister's in State?

(i) The Council of Ministers shall be collectively responsible to the State Legislative Assembly

(ii) The Governor shall administer the oath of office and secrecy to a Minister

(iii) The salaries and allowances of State Ministers shall be determined by the Union Legislature

(A) (i) only correct
(B) (i) and (ii) only correct
(C) (ii) and (iii) only correct
(D) (i) and (iii) only correct
(E) Answer not known

சரியான விடையைத் தேர்வு செய்க

பின்வரும் வாக்கியங்களில் மாநில அமைச்சர்கள் பற்றிய சரியான கூறுகளைத் தேர்வு செய்.

(i) மாநில அமைச்சர்கள் மாநிலச் சட்ட மன்றத்திற்குக் கூட்டாகப் பொறுப்புடையவர்கள்

(ii) மாநில அமைச்சர்களுக்கு ஆளுநர் அவர்கள் இரகசிய காப்பு மற்றும் பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்

(iii) மாநில அமைச்சர்களின் செலவினங்கள் சலுகைகள் மற்றும் பிற படிகளை மத்திய பாராளுமன்றமே தீர்மானிக்கும்

(A) (i) மட்டும் சரி
(B) (i) மற்றும் (ii) சரி
(C) (ii) மற்றும் (iii) சரி
(D) (i) மற்றும் (iii) சரி
(E) விடை தெரியவில்லை

48. Consider the following statements about the composition of the House of the people.

(A) It shall be composed of not more than 20 representatives from the Union Territories

(B) It shall be composed of not more than 2 members of the Anglo-Indian community, nominated by the Prime Minister

(C) It shall be composed of not more than 552 representatives of the state

(D) The President shall nominate 12 people having special knowledge in Literature, Science, Art and Social Science.

(E) Answer not known

மக்களவையின் அமைப்பு பற்றிய பின்வரும் அறிக்கைகளை படித்து சரியான விளக்கத்தை தேர்ந்தெடுக்கவும்.

(A) இது ஒன்றிய ஆட்சிப் பகுதிகளில் இருந்து 20 பிரதிநிதிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்

